இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 26-01-2024

# மதுரையில் பண்பாட்டுச் சின்னம்

மதுரையில் மாபெரும் பண்பாட்டுச் சின்னத்தைத் திறந்து வைத்திருக்கிறார், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாடு உள்ளளவும் நின்று நிலைபெறக் கூடிய சின்னமாக அது அமைந்துள்ளது.

**தைத் திங்கள் பிறப்பதையொட்டி பொங்கல் நாள், மாட்டுப் பொங்கல் நாள், காணும் பொங்கல் நாள், திருவள்ளுவர் நாள் ஆகிய அனைத்தையும் இணைத்து தமிழர் திருநாளாகப், பெருநாளாகக் கொண்டாடி வருகிறோம். இது ஒன்று தான் தமிழர்களின் பண்பாட்டுத் திருநாள் ஆகும். 'இந்த விழாவுக்குத்தான் கற்பனைக் கதைகள் இல்லை' என்பார் தந்தை பெரியார். 'இதற்கு இணையான விழா ஏதுமில்லை' என்பார் பேரறிஞர் அண்ணா. இப்பொங்கல் காலத்தில்தான் ஏறுதழுவுதல் என்ற விளையாட்டுப் போட்டிகளும் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அவை பண்பாட்டின் அடையாளங்களாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய பண்பாட்டு விளையாட்டை நடத்துவதற்காக மதுரையில், 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்' கட்டி எழுப்பப்பட்டுள்ளது.**

ஏறுதழுவுதலைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்பதைப் போலவே, இந்த அரங்கத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்பது மாதிரி கம்பீரமாக அமைந்துள்ளது. ஏறுதழுவுதல் நடக்க, அதைச் சுற்றிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் பார்க்க, வீரக்காட்சிகளானது, சங்க இலக்கியக் காட்சிகளாக நம் கண்முன் அமைந்திருக்கின்றன.

சிந்துச் சமவெளி முத்திரைகளில் திமில் காளைகள் இருக்கின்றன. ஹரப்பாவும் அலங்காநல்லூரும் ஒரே மாதிரியான காளைகளைக் கொண்ட இடங்களாக இருக்கின்றன. கீழடியிலும் காளைகள் இருந்ததற்கான சாட்சியங்கள் கிடைத்துள்ளன. ஏறுதழுவுதலைப் பாடாத இலக்கியம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, தமிழர்களின் வாழ்வியலோடு கலந்த விளையாட்டாக அது அமைந்துள்ளது. மாடுகள் எப்படி மனிதக்கூட்டத்தோடு கலந்தவையோ அதைப் போலவே, மாடுகளை வைத்து விளையாடும் விளையாட்டும் மனிதர்களோடு கலந்தவை ஆகும்.

**இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு சில சக்திகள் தடை எழுப்பியபோது 2006 ஆம் ஆண்டு தொடங்கி - இறுதி வெற்றியை உச்சநீதிமன்றத்தில் பெற்ற 2023 வரை போராடியும் வாதாடியும் வந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆகும். தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறைச் சட்டத்தையே 2009 ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு தடையில்லை என்ற இறுதித் தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெறும் அளவுக்கு வாதாடியது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஆகும்.**

"ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை அங்கீகரிக்கவில்லை. மாட்டு வண்டிப் பந்தயம், ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. 'கேலோ இந்தியா' உள்பட எந்தத் திட்டத்தின் கீழும் அங்கீகரிக்கவில்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும் 'கேலோ இந்தியா' உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை" என்று தெரிவித்தவர், ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் அனுராக் தாக்கூர். உச்சநீதிமன்றத்தில் கையை விரித்து விட்டது பா.ஜ.க. அரசு. ஆனால், 'இது உழவர்களின் பண்பாட்டுடன் கலந்தது' என்று வாதிட்டது தி.மு.க. அரசு ஆகும்.

இதன் தொடர்ச்சியாகத்தான் 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்' அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆசியாவிலேயே மாடு பிடிவிளையாட்டுக்கான முதல் அரங்கமாக இது கம்பீரமாக நிற்கிறது. இதற்கான அரசாணை 3.2.2023 அன்று போடப் பட்டது. 24.1.2024 அன்று கட்டி முடித்துவிட்டார்கள் பொதுப்பணித்துறை அதிகாரிகள். 66.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த இடத்தில் 16 ஏக்கரில் அரங்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 4,500 பேர் உள்ளே அமர்ந்து பார்க்கலாம். 62.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளும் இங்கு உள்ளது.

**பார்வையாளர் மாடம், பிரமுகர்கள் மாடம், வாடிவாசல், ஓய்வு அறை, காளைகள் காத்திருப்புக் கூடம், காளைகள் தயார்நிலைக் கூடம், அருங்காட்சியகம், நிர்வாக அலுவலகம், ஊடகவியலாளர் கூடம், விற்பனைக் கூடம், மாடுபிடி வீரர்கள் தங்கும் அறை, மருத்துவமனை என அனைத்துமே இங்கே உள்ளது. ஒரு பண்பாட்டு விளையாட்டுக்கு என தனியாக இத்தனை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள அரங்கம் எங்குமே இருக்காது.**

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சார்பில் இங்கே அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. காளைகள், ஏறுதழுவுதல் ஆகிய தகவல்களைக் கொண்டதாக மட்டுமே இந்த அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. காளை மாடுகள், பசுக்கள், எருமைகள் ஆகிய கன்றுகாலிகளைப் பற்றி படிப்பதற்காக மட்டுமே இது அமைந்துள்ளது. துறை சார்ந்த நூலகமாக இது அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்கள் இங்கே இருக்கின்றன. 1881 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கிருஷி சாஸ்திரம், மாட்டு வாகடமும் மாட்டு அங்க அடையாளமும் ஆகிய புத்தகங்கள் இங்கு உள்ளன. ஓலைச் சுவடிகள் உள்ளன. அந்தக் காலத்து பொங்கல், மாட்டுவண்டிப் புகைப்படங்களும் ஓவியங்களும் உள்ளன. கோட்டையில் பொங்கல் அன்று குண்டுகள் முழங்கி வணங்க வேண்டும் என்று ஆளுநர் வில்லியம் பெண்டிங் போட்ட உத்தரவு (1806) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**"தாய்த் தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பேர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் வழியில் - தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞரின் பாதையில் செயல்படும் இந்த திராவிட மாடல் ஆட்சியானது. தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளமாக இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை அமைத்துள்ளது." என்று பெருமை பொங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது மிகமிகப் பெருமைக்கு உரியது ஆகும்.**

ஜாதி, மத பிளவுகள் இல்லாமல் 'தமிழர்' என்ற ஒற்றுமை உணர்வுடன் ஏறுதழுவுதல் கொண்டாடப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் வைத்துள்ளார்கள்.

**பண்பாட்டுச் சின்னமானது பண்பாடு காக்கும் சின்னமாகவே திகழும்!**

●●

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, ஜன. 26 – இந்தியா–இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் மூலம் மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடவும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 22-1-2024 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (24-1-2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் IND-TN-10-MM-769 மற்றும் IND-TN-10-MM-750 என்ற பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 22-1-2024 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சமீப காலமாக தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக உள்ளது என்றும், இத்தகைய போக்கு பதட்டமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் ஒன்றிய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய தொடர் கைது நடவடிக்கைகள், தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிப்பதோடு, மீனவ மக்களிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற சூழலையும் உருவாக்கியுள்ளதாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவச் சமூகங்களின் கலாச்சார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை அச்சுறுத்தும் வகையில் உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவினை அமைப்பதன் மூலம் இது சாத்தியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தவிர்க்கவும், இந்திய மீனவர்களுக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும் இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு ஏதுவாகவும், உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கைக் குழுவினை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாடு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைந்து விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### திருப்பூரில் தனியார் தொலைக்காட்சி

# செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு முதல்வர் கண்டனம்!

## காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை! செய்தியாளருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவி வழங்க முதல்வர் உத்தரவு!

**சென்னை, ஜன. 26– திருப்பூர் மாவட்டம் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு முதல்வர் கண்டனம் தெரிவித்துள்ளார். காவல் துறை அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் சிகிச்சையில் உள்ள செய்தியாளருக்கு ரூ 3 லட்சம் நிதியுதவி வழங்கியும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியைச் சேர்ந்த, தனியார் தொலைக்காட்சி ஒன்றின் செய்தியாளர், நேச பிரபு அவர்கள் நேற்று அடையாளம் தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்ட செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன். ஊடக செய்தியாளர் மீதான இந்த தாக்குதல் நிகழ்ச்சி மிகவும் கண்டனத்திற்குரியது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டரீதியான கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பவம் நடப்பதற்கு முன்பாக செய்தியாளர் நேச பிரபு காவல் நிலையத்தில் பாதுகாப்பு கோரிய தன் மீது உரிய நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளர் உடனடியாக காத்திருப்போர் பட்டியலில் வைக்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் இதனை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி, மருத்துவ சிகிச்சையில் உள்ள நேச பிரபு அவர்களுக்கு, பத்திரிகையாளர் நல வாரியத்திலிருந்து ரூ. 3 லட்சம் வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்கள்.

### தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் அறிஞர்களுக்கு

# தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் இலக்கிய மாமணி விருது!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன. 26- தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-*

*பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த் தாயின் அறிஞர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் வழங்கி, அவர்தம் புலமைக்கும் தொண்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது. அவ்வகையில் மரபுத் தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய வகைப்பாட்டில் மூன்று அறிஞர்களுக்கு ஆண்டு தோறும் உயரிய விருதான இலக்கியமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. இலக்கியமாமணி விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை அளித்தும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பெறுவார்கள்.*

*இலக்கிய மாமணி விருது 2022ஆம் ஆண்டிற்கு கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர்* **அரங்க. இராமலிங்கம்** *(வயது 68) (மரபுத்தமிழ்), விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த* **கொ.மா.கோதண்டம்** *(வயது 83) (ஆய்வுத்தமிழ்), கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **முனைவர் சூர்ய காந்தன்** *(மா.மருதாச்சலம்) (வயது 67) (படைப்புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நேர்வாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி* **மணி அர்ஜீணன்** *(வயது 70) (மரபுத்தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **அர. திருவிடம்** *(வயது 77) (ஆய்வுத்தமிழ்), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த* **க.பூரணச்சந்திரன்** *(வயது 74) (படைப்புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.*

*2023ஆம் ஆண்டிற்கு இலக்கியமாமணி விருதிற்கு கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த* **ஞா.மாணிக்கவாசகன்** *(வயது 94) (மரபுத்தமிழ்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர்* **சு. சண்முக சுந்தரம்** *(வயது 73) (ஆய்வுத்தமிழ்), சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் இலக்கியா* **நடராசன் (எ) ச.நடராசன்** *(வயது 64) (படைப் புத்தமிழ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

### குடியரசு தினமான இன்று,

# 1132 பேருக்கு குடியரசுத் தலைவர் பதக்கங்கள்!

## ஒன்றிய அரசு அறிவிப்பு!

*புதுடெல்லி, ஜன. 26 - குடியரசுத்தினமான இன்று, ஆயிரத்து 132 பேருக்கு குடியரசுத் தலைவர் பதக்கங்கள் வழங்கப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.*

*ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தை முன்னிட்டு காவல்துறை, தீயணைப்புத் துறை உள்ளிட்ட பிரிவுகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு குடியரசுத்தலைவர் விருது வழங்கப்படும்.*

*அந்த வகையில், குடியரசு தினத்தை ஒட்டி காவல் துறை, தீயணைப்புத் துறை உள்ளிட்ட ஆயிரத்து 132 பேருக்கு குடியரசு தலைவர் பதங்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 24 பேருக்கு குடியரசுத் தலைவர் பதக்கங்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான பிரிவில் 3 பேருக்கு குடியரசுத்தலைவர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல்துறை ஐஜி லலிதா லட்சுமி, கமேண்டண்ட் ராஜலட்சுமி, துணை காவல் ஆய்வாளர் ராயப்பன் ஆகிய 3 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போல், மெச்சத்தக்க சேவைக்கான குடியரசு தலைவர் விருது தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கடந்த டிசம்பர் மாதம் தூத்துக்குடியில் பெய்த வரலாறு காணாத கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பாதிப்படைந்த அரசு பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட கட்டிடங்களை மறு சீரமைக்க பல்வேறு தரப்பினரும் உதவிக்கரம் நீட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள "தூத்துக்குடி இடுக்கண் களைவோம்" என்ற புதிய இணையதளம் மற்றும் அதற்கான இலச்சினையை (Logo) வெளியிட்டு, முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டத்தை மறு சீரமைப்பதற்காக தனது சொந்த நிதியில் இருந்து ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையை கழக துணைப் பொதுச்செயலாளரும், கழக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார். முன்னதாக, மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த மாவு அறைத்து தொழில் செய்து வரும் மகளிர் 7 பேருக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. ஏற்பாட்டில் புதிய மாவு அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. உடன், அமைச்சர் பெருமக்கள் கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.